# ஆகம வழிபாட்டில் மச்ச மாமிசங்கள்

குருவடி பணிந்து
மருத்துவ கலாநிதி இ. லம்போதரன் MD
கனடா சைவசித்தாந்த பீடம்
www.knowingourroots.com

வேதங்களில் பலி கொடுத்து வேள்வி செய்து வழிபடும் முறைகள் கூறப்பட்டிருப்பினும் ஆகமங்களிலும் சில இடங்களிலே இவ்விதமான வழிபாட்டு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உ-ம் 1

**ஸாமுத்ரம் ப்ருங்கராஜாய**
**மத்ஸ்யம்மத்ஸ்யோதநம் ம்ருகே, தத்யாத்**

பிருங்கராஜனுக்கு சமுத்திரத்து மீனையும், மிருகர்க்கு மீனோடு கூடிய அன்னத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

- **காமிக ஆகமம்**

உ-ம் 2

**ருத்ராயமாம்ஸமந்நம்ஸ்யாத்**
**ஆபாயமத்ஸ்யம்மாம்ஸஞ்ச சாபவத்ஸாயதாபவேத்**

உருத்திரனுக்கு மாமிசமும் அன்னமுமாம். ஆபருக்கு மீனையும், ஆபவற்சருக்கு மாமிசத்தையுஞ் சமர்ப்பிக்க வேண்டும்.

- **காமிக ஆகமம்**

உ-ம் 3

**க்ருத்மாம்ஸஞ்சரக்யைச சூலஸ்தாயைசிவாச்ரிதா;**

சிவனைச் சார்ந்தவர்கள் சூலத்திலுள்ள சரகிக்காக நெய்யையும், மாமிசத்தையுங் கொடுத்தல் வேண்டும்.

- **காமிக ஆகமம்**

உ-ம் 4

**மாம்ஸாந்நம்ஸ்யாத் க்ருஹேஷு**

வீடுகளில் மாமிச அன்னம் ஆம்.

- **காமிக ஆகமம்**

உ-ம் 5

**அஷ்டாநாம்பாஹ்யதேவாநாம் மாம்ஸாந்நம்பலிருச்யதே**

பாகிய தேவதைகளாகிய எண்மருக்கும் மாமிச அன்னம் பலியாகத் பகரப்படுகின்றது.

- **காமிக ஆகமம்**

உ-ம் 6

**ஹவிஷ்யம்தேவபவநே மாம்ஸாந்நம் ராஜமந்திரே**
**மத்யம்சூத்ரக்ருஹேப்ரோக்த மத்யத்ரமதுகல்பயேத்**

தேவக்கிருகத்தில் அவிசும், இராசக் கிருகத்தில் மாமிச அன்னமும், சூத்திரக்கிருகத்திற் கள்ளுங் கொடுக்கும்படி கூறப்பட்டது. ஏனையிடத்திலே தேன் சேர்த்துக் கொள்ளலாம்

- **காமிக ஆகமம்**